சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2013-2014ம் கல்வியாண்டிற்கான பெண்கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.5,01,650/-ஐ திருவெறும்பூர் உதவி தொடக்க கல்வி அலுவலரால் கையாடல் செய்யப்பட்டுள்ள நிலையில் அத்தொகையினை மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களின் கீழ் மாணாக்கர்களுக்கு வழங்க சிறப்பினமாக கருதி அனுமதித்து– ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் :86 நாள் : 25.05.2015

ஜய மன்மத வைகாசி 11, திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது.

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் நக எண்.உ3/ 19575/2014-1 நாள் 17.10.2014.

-----

ஆணை :-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 3ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களுக்கு பெண்கல்வி ஊக்குவிப்பு திட்டமும்,1 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான பிரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டமும் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகளின் இடைநிற்றலை குறைப்பதற்கும் அவர்களைத் தொடர்ந்து பயிலச் செய்வதற்கும் வழங்கப்படும் பெண்கல்வி ஊக்குவிப்பு உதவித்தொகை திட்டம் மற்றும் சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்காக அனுமதிக்கப்படும் பிரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட மாணவிகளுக்கு தொகையினை வழங்குவதற்கு ஏதுவாக திருவெறும்பூரில் உதவி தொடக்கக் கல்வி அலுவலராகப் பணி புரிந்த திரு சி.முத்துகிருஷ்ணன் என்பவரது பெயரில் காசோலை வழங்கப்பட்ட தொகை ரூ.5,01,650/-ஐ நேரடியாக வங்கியிலிருந்து காசாக்கி கொண்டு மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்காமல் கையாடல் செய்துள்ளார் எனவும், தற்பொழுது 649 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பெண் கல்வி ஊக்கத்தொகை ரூ.4,48,000/- மற்றும் சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகள் 29 பேருக்கும் அனுமதிக்கப்பட வேண்டிய கல்வி உதவித்தொகை ரூ.53,650/- என மொத்தம் 678 மாணவியர்களுக்கு வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.5,01,650/-ஐ சம்பந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலராகப் பணி புரிந்த திரு சி.முத்துகிருஷ்ணன் என்பவரிடம் உடனடியாக வசூல் செய்ய விதிமுறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனவும், மேற்காணும் தொகையான ரூ.5,01,650/-ஐ 2013-2014ம் கல்வியாண்டில் பயின்ற மாணாக்கர்களுக்கு வழங்க வேண்டிய தொகை என்பதாலும், இதுவரையிலும் இந்த இரண்டு திட்டங்களின் பயன் பயனாளிகளுக்கு சென்றடையவில்லை என்பதால் இத்தொகையினை 2014-2015ம் ஆண்டில் சிறப்பினமாக கருதி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.தி.பா..

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2013-2014ம் கல்வியாண்டில் பெண்கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு அனுமதிக்கப்பட்ட பிரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை ரூ.5,01,650/-யினை திருவெறும்பூர் உதவி தொடக்ககல்வி அலுவலரால் கையாடல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களின் கீழ் மாணாக்கர்களுக்கு வழங்க ஏதுவாக ரூ.5,01,650/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) சிறப்பினமாக கருதி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது பின்வரும் முறைகளில் பிரித்து பற்று வைக்கப்பட வேண்டும்:-

3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 488 மாணவிகளுக்கு ரூ.500/-வீதம் ரூ.2,44,000/-ஐ பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2225 – Welfare of Scheduled Castes, Scheduled Tribes and Other Backward Classes -01 welfare of Scheduled Castes - 277 Education - Schemes in the Twelfth Five Year Plan-II State Plan–JX Special incentive Scheme to Promote literacy among Scheduled Castes girls studying in std III to V -39 Rewards(D.P.Code 2225-01-277-JX-3903)".

6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் 161 மாணவிகளுக்கு ரூ.2,04,000/-ஐ (6ம் வகுப்பு மாணவிக்கு ரூ.1000/- மற்றும் 7 மற்றம் 8ம் வகுப்பு மாணவிக்கு ரூ.1500/-) பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2225 – Welfare of Scheduled Castes, Scheduled Tribes and Other BackWard Classes -01 welfare of Scheduled Castes -277 Education - Schemes in the Twelfth Five year Plan –II State Plan- JY Special Incentive Scheme to Promote literacy among Scheduled Castes girls studying VI Standard to VIII Standard -39 rewards (D.P.Code 2225 01-277-JY-3901)".

சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகள் 29 நபர்களுக்கு ரூ.1850/- வீதம் ரூ.53,650/-ஐ பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2225 –Welfare of Scheduled Castes, Scheduled Tribes and Other Backward classes -01 welfare of Scheduled Castes -277 Education – Schemes in the Twelfth Five Year Plan - II State Plan –KM Educational Concessions -12 Scholarships and stipends -01 Pre Matric (D.P.Code 2225-01-277-KM-1219)".

5. அரசு திட்டங்களான பெண்கல்வி ஊக்குவிப்பு திட்டம் மற்றும் சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் போன்ற திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.5,01,650/-ஐ கையாடல் செய்த திருச்சி மாவட்ட திருவெறும்பூர் உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு சி முத்துகிருஷ்ணன் என்பவரின் மீது அரசு விதிகளுக்குட்பட்டு துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், கையாடல் செய்த தொகை ரூ.5,01,650/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) தனியரிடமிருந்து மீளப்பெற்று அரசு கணக்கில் செலுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை 2015-2016ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு /இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் அளிக்கப்படும். இதனை எதிர்நோக்கி, ஆதிதிராவிடர் நல இயக்குநர் இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் அவர் இத்தொகையினை 2015-2016ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு /இறுதி திருத்த நிதி ஒதுக்க முன்மொழிவினில் இணைத்து அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

..3..

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.21880/நிதி(இ.செ)/2015 நாள் 19.5.20155ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.282 (இருநூற்று எண்பத்து இரண்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ.சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர். (பொ.)

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
(சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் வழியாக)
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை 6/18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 1/5.
உதவி சம்பளக் கணக்கு அலுவலர்.
<u>நகல்:–</u>
அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (வ.செ.பொது.II/ஆதி(ம)பந) துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு–1, ஆதிந.5) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி பாகங்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25.5.15
பிரிவு அலுவலர்.
25/5/15